# தொழுகையின் சுன்னத்துகள்

*தொழுகையின் சுன்னத்துகள் என்பவை இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய தொழுகைகளில் செய்துகாட்டிய செயல்களாகும். இந்த சுன்னத்துகளைப் பேணிக் கடைபிடிப்பதற்கான பிரதிபலன் (கூலி) கிடைக்கின்றது. அவையாவன:*

1 **இரண்டு கைகளையும் உயர்த்துவது (ர.்ப்உல் யதைன்)** *தொழுகையை நிறைவேற்றுபவர் தன்னுடைய இரண்டு கைகளையும் இரண்டு உள்ளங்கைகளும் திறந்தவாறு இருக்கும் வகையில், மூடிக்கொள்ளாமல், உயர்த்தவேண்டும், உள்ளங்கைகளுடைய உட்பகுதி ஃகிப்லாவின் புறமாக திறந்திருக்கவேண்டும் மற்றும் அவை தோள்களுக்கு சம உயரத்திலும், கைவிரல்கள் காதுகளுக்கு நேராக அருகிலும் இருக்க வேண்டும். இவ்வாறு கைகளை உயர்த்துவது கீழ்க்காணும் சமயங்களில் செய்வது சிறந்தது:* **தக்பீர் தஹ்ரீமஹ்** *சொல்லும்போது.* **ருகூஉ** *செய்யும்போது,* **ருகூவிலிருந்து** *எழுந்திருக்கும்போது மற்றும் இரண்டு ரகஅத்துகளுக்கு அதிகமான தொழுகையில்* **மூன்றாவது ரகஅத்திற்காக (ஃகியாம்)** *எழுந்து நிற்கும்போது.*

2 **வலது கையை இடது கையின்மீது வைப்பது** *இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய வலது கையை இடது கையின்மீது வைப்பார்கள் மற்றும் கைகளைத் தன்னுடைய மார்பின்மிது கட்டிக்கொள்வார்கள் (அபூ தாவூத்)*

3 **தொழுகையில் தக்பீர் தஹ்ரீமஹ்விற்குப் பின் துஆ ஓதுவது** *இறைத்தூதர் ﷺ அவர்கள் தக்பீர் தஹ்ரீமஹ்விற்குப்பின் சூரா ஃபாதிஹா ஓதுவதற்கு முன்பாக ஒரு துஆ ஓதுவார்கள், உதாரணமாக, இந்த துஆ:*

**اللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ، كَمَا بَاعَدْتَ بَيْنَ المَشْرِقِ وَالمَغْرِبِ، اللَّهُمَّ نَقِّنِي مِنَ الخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ، اللَّهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالبَرَدِ (متفق عليه)**

*பொருள்: அல்லாஹ்வே, கிழக்கு மற்றும் மேற்கிற்கு இடையே வெகு தூரத்தினை ஏற்படுத்தியுள்ளதுபோன்றே எனக்கும் என்னுடைய தவறுகளுக்குமிடையே தூரத்தினை ஏற்படுத்திவிடுவாயாக, அல்லாஹ்வே, வெண்மையான துணிகள் எவ்வாறு தண்ணீர் மற்றும் பனிக்கட்டிகளைக்கொண்டு அழுக்கு மற்றும் அசுத்தத்திலிருந்து தூய்மைப்படுத்தப்படுகின்றனவோ அவ்வாறே என்னையும் என்னுடைய பாவங்களிலிருந்து தூய்மைப்படுத்திவிடுவாயாக. (புக்ஹாரி, முஸ்லிம்).*

www.uzairfalahi.com

4 **இஸ்திஆத்ஜஹ் (أَعُوذُ بِاللَّهِ ஓதுவது)** *அல்லாஹ் தஆலா கட்டளையிடுகிறான்*

فَإِذَا قَرَأْتَ ٱلْقُرْءَانَ فَٱسْتَعِذْ بِٱللَّهِ مِنَ ٱلشَّيْطَٰنِ ٱلرَّجِيمِ ﴿٩٨﴾ (النحل:98)

பொருள்: *மேலும், நீங்கள் ஃகுர்ஆனை ஓதத் தொடங்கும்போது சபிக்கப்பட்ட ஷைத்தானைவிட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புக்கோருங்கள்(அந்நஹ்ல்:98).* இறைத்தூதர் ﷺ அவர்கள் ஓதத் தொடங்கும்போது

أَعُوذُ بِاللَّهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ مِنْ هَمْزِهِ، وَنَفْخِهِ، وَنَفْثِهِ (ابن ماجة)

என்று ஆரம்பிப்பார்கள், அதாவது, அல்லாஹ்வே, *நான் சபிக்கப்பட்ட ஷைத்தானைவிட்டும், அவனுடையதுாண்டுதல்கள், ஏமாற்று ஊசலாட்டங்களிலிருந்துஉன்னிடம்பாதுகாப்புக்கோருகிறேன்* (இப்னுமாஜா)

5 **ஆமீன் (آمِيْنَ) சொல்லுதல்** சூரா ஃபாதிஹா ஓதி முடித்தபின் ஆமீன் சொல்வது சுன்னத்தாகும். ஜஹ்ருடைய தொழுகையானால் (இமாம் சப்தமாக ஓதும் தொழுகை) சத்தமாகவும், சிர்ரான தொழுகையானால் (இமாம் ஃகிராத் அமைதியாக ஓதும் தொழுகையில்) அமைதியாகவும் சொல்லவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள்கூறுகின்றார்கள், இமாம்

غَيْرِ ٱلْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا ٱلضَّآلِّينَ ﴿٧﴾ (الفاتحة:7)

என்று ஓதி முடிக்கும்போது, பின்னால் தொழுபவர்கள், ஆமீன் என்று கூறவேண்டும், ஏனெனில், யாருடைய ஆமீன் கூறுவது வானவர்கள் கூறும் ஆமீனுடன் இணைந்து ஒரே சமயத்தில் சொல்லப்படுமோ அவர்களுடைய முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடுகின்றன (புக்ஹாரி, முஸ்லிம்).

6 **ஃகிராஅத் (القِرَاءَة) ஓதுதல்** சூரா ஃபாதிஹா ஓதி முடித்தபின் ஒருவர் இமாமாக இருந்தாலும், தனியாகத் தொழுபவராக இருந்தாலும், முதல் இரண்டு ரகஅத்துகளில் திருக்ஃகுர்ஆனுடைய சில வசனங்களை ஓதவேண்டும். இவ்விஷயத்தில், இறைத்தூதர் ﷺ அவர்கள் பின்னால் தொழுகையிலுள்ளவர்களுடைய நிலைமையைக் கவனத்தில் கொள்வது வழக்கமாக இருந்தது, உதாரணமாக, எவரும் அழும் குரலைக் கேட்டால் அவர்கள் ﷺ ஓதுவதைச் சுருக்கிக் கொள்வார்கள். இவ்வாறே, தொழுகையின் முதல் ரகஅத்தைஅதிகமானவர்கள் தொழுகையில் இணைந்துகொள்ளவேண்டும் என்பதற்காக நீளமானதாக

www.uzaifalahi.com

ஆக்குவார்கள். ஜஹ்ருடைய தொழுகைகளான ஃபஜ்ரு, ஜுமுஆ, மங்க்ரிப் மற்றும் இஷா தொழுகைகளின் முதல் இரண்டு ரகஅத்துகள் மற்றும் பெருநாள் தொழுகைகள் ஆகியவற்றில் இமாம் சப்தமாக ஃகிராஅத் ஓதுவார். இத்தொழுகைகளில், பின்னால் நிற்பவர்கள் இமாம் ஓதுவதைக் கேட்கவேண்டும், அதாவது, முஃக்ததிகளான இவர்கள் ஃகுர்ஆன் ஓதக்கூடாது, கேட்டால் மட்டும் போதமானது. ஏனெனில், இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறுகின்றார்கள், தொழுகை நிறைவேற்றுபவர் இமாமைப் பின்தொடர்பவரானால், இமாமுடைய ஃகிராஅத் அவருடைய ஃகிராஅத்தாகவும் கருதப்படும் (இப்னுமாஜா). இருப்பினும், மார்க்கச்சட்ட அறிஞர்கள் இவ்விஷயத்தில் கருத்துவேறுபாடு கொண்டுள்ளதைப் பார்க்கும்போது (சூரா ஃபாதிஹா ஓதுவது முக்கியமானது என்ற வகையில்) ஒவ்வொரு ரகஅத்திலும் அனைவரும் சூரா ஃபாதிஹா ஓத வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

7 **தக்பீராத் இன்திஃகால்** தொழுகையில் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செல்லும்போது اَللّٰهُ أَكْبَرُ என்று கூறுவது சுன்னத்தானதாகும், உதாரணமாக, ஃகியாம் (நிற்கும் நிலையி)லிருந்து ருகூவிற்குச் செல்லும்போது அல்லது ருகூவிலிருந்து எழுந்து சஜ்தாவிற்குச் செல்லும்போது. ஆனால், ருகூவிலிருந்து எழுந்து நிற்கும்போது رَبَّنَا وَلَكَ الحَمْدُ என்று கூறவேண்டும்.

8 **ருகூஉவின் நிலை மற்றும் துஆ** இறைத்தூதர்ﷺ அவர்கள் ருகூஉ செய்யும்போது அவர்களுடைய முதுகை எவ்வகையில் நேராக வைப்பார்கள் என்றால், அதன்மீது தண்ணீர் ஊற்றப்பட்டாலும் அது அங்கேயே நிற்கும் (பாய்ந்தோடாது). அவர்கள் ﷺ தன்னுடைய உள்ளங்கைகளை முழங்கால் மூட்டின்மீது வைத்துக்கொள்வார்கள், அவற்றின் விரல்களைப் பரப்பிக்கொள்வார்கள் மற்றும் அவர்களுடைய முழங்கை மூட்டுக்கள் விலாவிலிருந்து விலகியே இருக்கும். ருகூவில் அவர்கள்ﷺ இந்த துஆவை ஓதுவார்கள்: سُبْحَانَ رَبِّيَ الْعَظِيمِ (முஸ்லிம்), சில சமயங்களில் இவ்வாறும் கூறுவார்கள்: سبُّوح قدُّوس ربُّ الملائكةِ والرُّوح (முஸ்லிம், அபூ தாவூத், நிசாயி).

9 **ருகூவிலிருந்து எழுந்து நின்றபின்:** இதனைப்பற்றி அவர்கள் ﷺ கூறுகின்றார்கள், இமாம் سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ என்று கூறியபின், பின்னால் தொழுபவர்கள் رَبَّنَا وَلَكَ الحَمْدُ என்று கூறவேண்டும், ஏனெனில், எவர் இவ்

www.uzaifalahi.com

வாறு கூறுவது வானவர்கள் இவ்வாறு கூறுவதுடன் இணைந்து ஒன்றாகச் சொல்லப்படுமானால் அவர்களுடைய முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடுகின்றன (புக்ஹாரி, முஸ்லிம்).

இறைத்தூதர்ﷺ அவர்கள் **رَبَّنَا وَلَكَ الحَمْدُ** என்று கூறியபின், கூடுதலாகக் கீழ்க்காணும் வாசகத்தையும் கூறுவார்கள்:

**مِلْءَ السَّمَاوَاتِ وَمِلْءَ الْأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ أَهْلُ الثَّنَاءِ وَالْمَجْدِ أَحَقُّ مَا قَالَ الْعَبْدُ وَكُلُّنَا لَكَ عَبْدٌ اللَّهُمَّ لَا مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجد (مسلم)**

*பொருள்: அல்லாஹ்வே, வானங்கள் நிரம்பும் அளவிற்கும், பூமி நிரம்பும் அளவிற்கும், நீ அதற்குப்பின்பும் எதை நாடுகின்றாயோ அதுவும் நிரம்பும் அளவிற்கு புகழனைத்தும் உனக்கே, புகழுக்கும் மேன்மைக்கும் உரியவனே, எங்களில் ஒவ்வொருவரும் உன்னுடைய அடியான் என்று கூறுவதுதான் ஒரு அடியானுடைய மகத்தான கடமையாகும், அல்லாஹ்வே, நீ கொடுக்க நாடிய ஒன்றை யாராலும் தடுத்து நிறுத்தி விடமுடியாது, நீ கொடுக்காத ஒன்றை யாராலும் கொடுத்துவிடவும் முடியாது, எந்த ஒரு ஆற்றல்மிக்கவனுக்கும் அவனுடைய ஆற்றல் உனக்கு முன்பாக எவ்வகையிலும் பயனளிக்காது (முஸ்லிம்).*

8 **சஜ்தாவின் நிலை** சஜ்தாவிற்குச் செல்லும் போது தொழுபவர் முதலில் தன்னுடைய முழங்கால் முட்டுகளைத் தரையில் வைக்கவேண்டும், அதன்பின் கைகளை வைக்கவேண்டும். சஜ்தாவை ஏழு உறுப்புக்களைக்கொண்டு செய்யவேண்டும், அவையாவன: இரண்டு உள்ளங்கைகள், இரண்டு முழங்கால் முட்டுகள், இரண்டு கால்கள் (கட்டை விரல்கள்) மற்றும் முகம் (நெற்றி). சஜ்தாவில் தொழுபவர் முழங்கைகளைப் படுக்க வைக்காமல் தூக்கியே இருக்கவேண்டும் மற்றும் அவற்றை விலாப்புறத்திலிருந்து அக்குள் தெரியும் வகையிலும் சற்று விலக்கியே வைக்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: சஜ்தாவில் இஃதிதால் (சீரான முறையைப்) பேண வேண்டும், ஒரு நாய் தன்னுடைய முன் கைகளைத் தரையில் படுக்கவைப்பது போன்று, அவ்வாறு நீங்கள் கைகளைப் படுக்கவைக்காதீர்கள் (புக்ஹாரி, முஸ்லிம்). பெண்கள் சஜ்தா செய்வது ஆண்கள் சஜ்தா செய்வதிலிருந்து சற்று வேறுபடும், பெண் கைகளைத் தன்னுடைய விலாப்புறங்களோடு இறுக்கி அணைத்துக்கொண்டு சஜ்தா செய்ய வேண்டும். இறைத்தூதர்ﷺ அவர்கள் சஜ்தாவில் இந்த துஆவை ஓதுவார்கள்: **سُبْحَانَ رَبِّيَ الأَعلىٰ**

www.uzairfalahi.com

11 **இரண்டு சஜ்தாக்களுக்கு இடையிலான அமர்வு** இறைத்தூதர்ﷺ அவர்கள் சஜ்தாவிலிருந்து எழுந்து உட்காரும்போது தரையில் தன்னுடைய இடது காலின்மீது உட்கார்ந்துகொண்டு தன்னுடைய வலது காலை அதன் விரல்கள் ஃகிப்லாவை நோக்கியிருக்கும் வகையில் நேராக நிற்கவைத்தக்கொள்வார்கள். அதன்பின் இந்த துஆவை ஓதுவார்கள்: رَبِّ اغْفِرْ لِي ربِّ اغْفِرْ لِي *என் இரட்சகனே என்னை மன்னித்தருள்வாயாக, என் இரட்சகனே என்னை மன்னித்தருள்வாயாக.*(இப்னுமாஜா).

12 **ஜல்சா இஸ்திராஹஹ் (இரண்டாவது அல்லது நான்காவது ரகஅத்திற்கு எழுவதற்கு முன்பு அமருதல்)** இந்தக் குறுகிய அமர்வு இரண்டாவது மற்றும் நான்காவது ரகஅத்திற்கு எழுவதற்கு முன்பு மேற்கொள்ளப் படுகின்றது.

13 **முதலாவது ஃகஅதா (அமர்வு)** இது மூன்று அல்லது நான்கு ரகஅத்துக் களைக் கொண்ட தொழுகைகளில் இரண்டாவது ரகஅத்திற்குப்பின் உட்காருவதைக் குறிக்கும். இந்த அமர்வில் தொழுகை நிறைவேற்று பவர் தஷஹ்ஹுத் ஓதுவார். இதன் பகுதியாக, தன்னுடைய வலது கையின் ஆட்காட்டி விரலைக்கொண்டு أَشْهَدُ என்று சொல்லும்போது விரலை உயர்த்தி சைகை செய்யவேண்டும்.

14 **ஸலவாத் (درود/الصلاة) ஓதுதல்** கடைசி ஃகஅதாவில் தஷஹ்ஹுத் ஓதி முடித்தபின் ஸலவாத்தின் இந்த வாசகத்தை ஓதவேண்டும்:

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ، وَعَلَى آلِ إِبْرَاهِيمَ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ، اللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ، وَعَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ (مسلم)

பொருள்: *அல்லாஹ்வே, முஹம்மத் ﷺ அவர்கள்மீதும் முஹம்மத் ﷺ அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் நீ இப்ராஹீம் (அ) அவர்கள் மீதும் இப்ராஹீம் (அ) அவர்களுடைய வழிவந்தவர்கள்மீது ஸலவாத் எனும் அருள் பொழிந்தவாறே ஸலவாத்தைக்கொண்டு அருள்புரிவா யாக, நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மேன்மைக்குரியவனுமாய் இருக்கின்றாய். அல்லாஹ்வே, முஹம்மத்ﷺ அவர்கள்மீதும் முஹம்மத் ﷺ அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் நீ இப்ராஹீம் (அ) அவர் கள் மீதும் இப்ராஹீம் (அ) அவர்களுடைய வழிவந்தவர்கள்மீது நற்*

www.uzairfalahi.com

*பேறு அருள்பொழிந்தவாறே பரக்கத்தைக்கொண்டு அருள்புரிவாயாக, நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மேன்மைக்குரியவனுமாய் இருக்கின்றாய்.*

அதன்பின், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ள வகையில் துஆ செய்யவேண்டும். கூறுகிறார்கள்: நீங்கள் ஸலவாத் ஓதி முடித்தபின் நான்கு விஷயங்களிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக்கோருங்கள். அவர்கள் ﷺ கீழ்க்கண்டவாறு துஆ கேட்பார்கள்:

**اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ القَبْرِ، وَمِنْ عَذَابِ النَّارِ، وَمِنْ فِتْنَةِ المَحْيَا وَالمَمَاتِ، وَمِنْ فِتْنَةِ المَسِيحِ الدَّجَّالِ (مسلم)**

பொருள்: *அல்லாஹ்வே, நான் ஃகபரின் வேதனையிலிருந்தும், நரகத்தின் நெருப்பிலிருந்தும், இந்த வாழ்க்கை மற்றும் மரணத்தின் சோதனைகள் மற்றும் மசீஹ் தஜ்ஜாலின் கொடுமையிலிருந்தும் உன்னிடத்தில் பாதுகாப்புக் கோருகிறேன்.*

கடைசி ஃகஅதாவில் உட்காரும் முறையானது, ஒருவர் தரையின்மீது உட்கார்ந்து தன்னுடைய வலது காலை இடது காலின்கீழிருந்து நீக்கி வலது காலின் பாதத்தை நிற்க வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறான அமர்வு தவர்ருக் எனப்படுகின்றது.

இறைத்தூதர் ﷺ அவர்கள் தொழுகையை முடித்துவிட்டபின் இந்த துஆவை ஓதுவார்கள்:

**لاَ إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ، وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، اللَّهُمَّ لاَ مَانِعَ لِمَا أَعْطَيْتَ، وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ، وَلاَ يَنْفَعُ ذَا الجَدِّ مِنْكَ الجَدُّ (متفق عليه)**

அதன்பின் மூன்று தடவை இஸ்திங்ஃபார் ஓதுவார்கள் (முஸ்லிம்) அதன்பின் **(مسلم) اللَّهُمَّ أَنْت السَّلَام ومنك السَّلَام تبَارَكت يَا ذَا الْجلَال وَالْإِكْرَام** ஓதுவார்கள்: (பொருள்:) *அல்லாஹ்வே, நீதான் சாந்தியானவன், சாந்தி உன்னிடமிருந்துதான் உண்டாகின்றது, நீ அருள்மிக்கவன், நீயே பரிசுத்தமானவனும் மேன்மையும் உயர்வுமுடையவனாக இருக்கின்றாய்* (முஸ்லிம்). இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் முஆத்ஜ் அவர்களுக்கு இந்த துஆ ஓதுமாறு அறிவுறுத்தினார்கள்:

**اللَّهُمَّ أعِنَّا على ذِكْرِكَ وشُكْرِكَ وحُسْنِ عِبَادَتِكْ (أبو داوُد، الترمذي، إبن ماجة)**

www.uzaifalahi.com

*பொருள்: அல்லாஹ்வே, நாங்கள் உன்னைத் தியானிக்கவும் உனக்கு நன்றி செலுத்தவும் உன்னை சீரான முறையில் அடிபணிந்து வணங்க வும் அருள்புரிவாயாக (அபூ தாவூம், திர்மமிதி, இப்னு மாஜா).*

இறைத்தூதர்ﷺ அவர்கள் தொழுகைக்குப்பின் சூரா இக்ஹ்லாஸ் மற்றும் முஅவ்வித்ஜதைன் (சூரா அல் ஃபலஃக் மற்றும் சூரா அன் நாஸ்) ஓதுவதும் வழக்கமாக இருந்தது. (புக்ஹாரி, முஸ்லிம்). இவ்வாறே, அவர்கள் ﷺ **ஆயதுல் குர்சி** ஓதுவார்கள், மற்றும் கூறுவார்கள் எவர் ஒருவர் கடமையான தொழுகைகளுக்குப்பின் **ஆயதுல் குர்சி** ஓதும் வழக்கத்தைக்கொண்டிருப்பாரோ அவர் மரணத்திற்குப்பின் சுவர்க்கத்தில் செல்வதை எந்த ஒன்றும் தடுக்கமுடியாது.(நிசாயி). அவர்கள் ﷺ கூறுகிறார்கள், ஒவ்வொரு தொழுகைக்குப்பின்பும் ஒருவர் *33* தடவை **سُبْحانَ الله** *33* தடவை **الحَمْدُ لله** மற்றும் *33* தடவை **أَللّهُ أَكْبَرُ** என்று தியானம் செய்தால் இது *99* தடவையாக ஆகிவிடும், நூறாம் தடவையாக எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில்

**لاَ إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ، وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ**

அவருடைய பாவங்கள் சமுத்திரத்தின்மீதான நுரையைப்போன்று அதிகமாக இருந்தாலும் மன்னிக்கப்பட்டுவிடும் (முஸ்லிம்). இறைத்தூதர்ﷺ அவர்கள் ஃபஜ்ரு மற்றும் மங்க்ரிப் தொழுகைகளுக்குப்பின் அதே நிலையில் உட்கார்ந்திருப்பார்கள் மற்றும் இந்த துஆவை ஓதுவார்கள்:

**لاَ إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ، وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ**

இந்த வாசகத்தை அவர்கள் பத்து தடவை திரும்பத்திரும்பக் கூறுவார்கள் (திர்மிதி) மற்றும் இதனையும் ஓதுவார்கள்.

**اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْجَنَّةَ وَأَجِرْنِي مِنَ النَّارِ**

இந்த வாசகத்தை அவர்கள் ஏழு தடவை திரும்பத்திரும்பக் கூறுவார்கள் (அஹ்மத்)

* * *

www.uzairfalahi.com